1430

Regd. No. M. 878.

தொகுதி 10. பகுதி 7.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919௵ நவம்பர்௴—சித்தார்த்தி௵ கார்த்திகை௴

MAR 1924

விஷயங்கள்.

தற்காலநிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர் பி. எ.	185
தத்துவஞான அனுஷ்டானம்—வி. [illegible]ராஜ [illegible]ஸர்	193
தலைவரும் அவர் கடமையும்	201
சுகம் — அகஸ்தியலிங்கம் பிள்ளை	207
நடராஜர் ௸	212
ஸமரஸ ஸ்தோத்திரம்—எஸ். சாமிநாதையர்	214
சமாசாரம்	216

அ. அரங்கசாமி ஐயர் பி. எ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷசந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reseved.

யோக உபந்யாஸங்கள்—அன்னி பெஸண்டு
ப. நாராயணையா மொழிபெயர்ப்பு 0—12—0

மரணபயம் வேண்டாம்—ப. நாராயணையர் 0—2—0
டஜன் பிரதிகளுக்கு 1—4—0

தியானக்கிரம விஷயம்.
கே. எஸ். இராமசந்திரையர் 0—4—0

...ந்திரோதயம் 4-வது தொகுதி.
...பைண்டுபண்ணினது. 2—8—0

...ஸ், மதுரை.

சிவமணமும் கானரஸமும் பொருந்திய நாடகம் எது?
மாணிக்க வாசகர்—துரைச்சாமி ஐயங்கார். பி. ஏ. 0—8—0

பக்தி ரஸமும் சோக ரசமும் மலிந்த நாடகமெது?
மீராபாய்—புரோபஸர் ஆர். ஸ்ரீனிவாசன் எம். ஏ. 1—4—0

குடும்பசம்பவங்களை இனிமையாய் எடுத்துக் கூறும் சிறந்த சிறு நாடகங்கள் எவை? மங்களம். 0—4—0
மீனாக்ஷிசுந்தரம். 0—6—0

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

படங்கள்.	விலைசரசம்.	படங்கள்
பிளாவட்ஸ்கி அம்மையார்		0—1—0
அன்னிபெஸண்டு		0—1—0
கர்னல் ஆல்காட்		0—1—0
தாமோதர மாவலங்கர்		0—1—0
ப. நாராயணையர்		0—1—0

தபாற்கூலியும் பாக்கிங்கூலியும் வேறு.
பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

மதுரை காமாட்சியம்மன் அழகிய புட்டாச்சேலை.

விலை ரூபா 4! விலை ரூபா 4!

16 முழம் நீளம், 2½ முழம் அகலம், சாயத்திற்கு உத்திரவாதம், தற்காலத்துக்குத் தகுந்த நாணயமான நல்ல சேலை. இவ்... புட்டாக்கள் போட்ட... ஒரே முறையில் ந...

10, வைத்தி...

உ

உயர்ந்த தினுசுகள்! குறைந்த விலைகள்!!

தா. ரெங்கசாமி அய்யர் அண் சன்ஸ்

தங்கமெடல்கள் சன்மானம் பெற்ற

ஜவுளிவியாபாரிகள்.

மதுரை.

ரூ. 1 முதல் 1000 ரூ. வரையுள்ள ஜவுளி

தினுசுகள் விற்பனைக்குத் தயார்.

நம்முடைய ஜவுளிக்கடையில் காசி பனாரஸ், அம்மாப்பேட்டை, உள்ளூர், பெங்களூர், ஆரணி, காஞ்சிபுரம், கல்கத்தா, பம்பாய், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி இன்னும் அநேக ஊர்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும் ஜரிகையும் கலந்த உயர்ந்த சேலைகள் ரூ. 50 முதல் ரூ. 1000 வரையிலும் முகூர்த்தப்பட்டு சோமன் ஜோடிகள் ரூ 10 முதல் ரூ. 150 வரையிலும் ரவிக்கை தினுசுகள் ரூ. 2 முதல் ரூ. 100 வரையிலும் இன்னும் அநேக புது தினுசுகளும் ஏராளமாய்த் தயார்செய்து வைத்திருக்கிறோம். ஆகையால் வேண்டியவர்கள் நம்முடைய கடையில் வந்து பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர குறைந்த விலையும் கெட்டிச்சாயமுமுள்ள நாட்டு சேலைகள், துப்பட்டாக்கள், வேஷ்டி ஜோடிகள் முதலிய அநேக தினுசுகள் ஏராளமாயிருக்கின்றன.

ஹெட் ஆபீஸ், வெளி வீதி.

பிராஞ்சு, மேலக்கோபுர வாசல்.

மதுரை.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்ருகப் பரீட்சிக்கப்பட்டது!

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலைபெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினுல் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக் இனமாக அனுப்பப்படும். தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55, ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹீம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ஹர ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி.

பாலமித்ர

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதபபடும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

மூதன்மையான

மருந்து சென்ற 35 ஹீகாலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ. 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பிக்குவிலை ரூ. 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுவாசல் தெரு, மதுரை.

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ள-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக் கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை தினுசுகளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக் கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேணடுமானால் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10.	சித்தார்த்தி௵ கார்த்திகைமீ 1919௵ நவம்பர்மீ	பகுதி 7

தற்கால நிலைமை.

மதுரையில் நாளிது நவம்பர் மாதத்தில் நடந்த வித்தியாக் கான்பரன்சில் செய்யப்பட்ட அநேக தீர்மானங்களுள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது ஒன்றாகும். அதாவது உயர்தரப் பள்ளிக்கூடங்களில் 6-வது பாரம் வரையில் எல்லா வகுப்புகளிலும் தாய் பாஷையிலேயே பாடங்களைக் கற்பிக்கவேண்டும் என்ற தீர்மானம். வேறென்னாட்டிலும் தாய் பாஷையில் தான் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஒரு வித்வத் சபையில் தீர்மானிக்க வேண்டும் என்ற அவசியம் நேரிடாது. ஆனால் நம் நாட்டிலோ அத்தகைய அவசியமானது ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் சென்ற சில வருஷங்களாக நம்மவருக்குள் உண்டாயிருக்கும் உணர்ச்சி காரணமாக, இவ்வித மாறுபாடு ஏற்பட்டிருப்பதே சந்தோஷத்திற்கு ஏதுவாகின்றது. ஏன் எனில் 5 அல்லது 6 வருஷங்களுக்கு முன்னர் இம்மாதிரியான சபையில் இத்தீர்மானமானது பிரேரேபிக்கப் படவும் மாட்டாது. அங்ஙனம், பிரேரிக்கப்படினும் அங்கீகரிக்கப்பட

வேமாட்டாது. ஆனல் இக்கான்பரன்சிலோ இத்தீர்மானமானது ஒருங்கே அனைவராலும் ஏகோபித்துக் கொள்ளப்பட்டது என்பது கால பரிபாகத்தின் அடையாளம்.

***

இதே மாதத்தில் 22, 23-ஆம் தேதிகளில் மதுரையில் கூடிய வேறு ஒரு கான்பரன்சில் வேறு ஒரு தீர்மானம் கொள்ளப்பட்டது. அதாவது ஹிந்துக்களில் நாடார் வகுப்பாரும், ஏனைய வகுப்பாரும் கோவில்களுக்குள் செல்ல உரிமை யுள்ளவர்கள் என்றும் அம்மாதிரி செல்வதைத் தடுக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் கான்பரன்சில் மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களின் பற்பல பாகங்களிலிருந்து அனேகம் பிரதிநிதிகள் ஒருங்கே வந்து சேர்ந்திருந்தார்கள. மேற்கூறிய தீர்மானத்தை பிரேரேபணை செய்தது ஸ்ரீமான் வி. இராமசந்திரையர், அதை ஆமோதித்து ஆதரித்துப் பேசியவர் ஸ்ரீமான் சந்தானகிருஷ்ண நாயுடுவும், ஸ்ரீமான் கே. ஆர். வெங்கடராமையர் அவாகளும். அக்கிராசனர் ஸ்ரீமான சி. இராஜகோபாலாச்சாரியாரும் முதன் முதலாகச் செய்த துவக்கப் பிரசங்கத்திலேயே இநத ஜில்லாக் கோவில்களில் நாடார் சகோதரர்களை நுழையக் கூடாதென்று தடுப்பது நியாமில்லையென்றும, அவர்களில் அனேகர் செல்வாக்குள்ளவர்களாயும், தனவந்தர்களாயும், முக்கியஸ்தர்களாகவும், முன்வந்திருக்கிறார்கள் என்றும், அவர்களை சில தெருக்களிலும், கோவில்களிலும் நுழையக்கூடாதென்று தடுப்பது அநியாயமாயிருக்கிறதென்றும், அவர்களே கிறிஸ்தவர்களாய் மாறி வநதால இதே கோவில்களிலும் தெருக்களிலும் சிலபாகம் வரை நுழையக் கூடியதாயிருக்கிறதென்றும், மேலும் இந்த இரண்டு ஜில்லாக்களையும் திருநெல்வேலி ஜில்லாவையும் தவிர மற்ற ஜில்லாக்களில் ஹிந்து நாடார்கள் அங்ஙனம் தடுக்கப்படுகிறதில்லை யென்றும் ஆனல் மற்ற ஹிந்துக்கள் போல் உரிமையுடையவர்கள் என்றும், ஆகையால் இந்த விபரீதத்தை நீக்க வேண்டுவது அத்தியாவசியம் என்றும் கூறினர்.

இத்தீர்மானத்தை வெகு சிலர் தவிர மற்ற பெரும்பாலார் ஆரவாரத்துடன் அங்கீகரித்தார்கள். இதை ஆக்ஷேபிப்பவர் பற்பல காரணங்கள் கூறினார்கள். இது ஜன சமூக ஆசாரத்தைப்பற்றிய சீர்திருத்தமாகையால் ராஜீய சீர்திருத்தங்களைப் பற்றிய சபையில் பேசத் தகுதியற்றது என்றும், ஹிந்துக்களும் ஹிந்துக்களல்லாதவர்களும் கூடி ஹிந்துக்களுடைய கோவில்களில் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றிப் பேசுதல் கூடாது என்றும் இன்னும் பல காரணங்களைக் கூறியும் ஆக்ஷேபித்தார்கள். அவ்வாக்ஷேபணைகள் ஒழுங்கானவையா அல்லது அத்தீர்மானம் இச்சபையில் கொண்டு வந்தது சரியா என்பதைப்பற்றி பரியாலோசனை செய்ய இது இடமல்ல. ஆனால் ஒரு முக்கியமான வகுப்பாரை கோவில்களுக்குள் நுழையக் கூடாது என்று தடுப்பது சரியல்லவென்று ஹிந்துக்களில் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள் என்பதும், அப்படி அபிப்பிராயப்படுவதோடு நிற்காமல் அவ்வபிப்பிராயத்தைத் தீர்மானமாக வெளிப்படையாகக் கூறினார்கள் என்பதும் கவனிக்கத் தக்கது. இது தற்கால ஜனங்களின் மனப்போக்கைக் காட்டுகிறது. இக்கான்பரன்சில் நாடார் பிரதிநிதிகளும் அநேகர் வந்திருந்ததாகத் தெரியவருகிறது. இதுகாறும் நாடார்கள் விசேஷமாக மற்றை இந்துக்களோடு பொது ஜனக் கூட்டங்களில் சேராமலிருந்தது போலிருக்காமல் இனி அவர்கள் சேர்ந்து உழைக்க முன் வருவார்கள் என்றும் நம்ப இடமுண்டாகிறது.

***

ஸ்ரீமதி அன்னிபெஸண்டம்மாள் அவர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார்கள் எனத் தந்தி வந்திருக்கிறது. டிசம்பர் மாதம் பிற்பாதியில் இந்தியாவில் வந்திறங்குவார்கள். அமிர்தசரசில் நடக்கப்போகிற காங்கிரஸ்ஸுக்கும், ஸ்ரீ காசியில் நடக்கப்போகிற பிரம்மஞானக் கன்வென்ஷனுக்கும் போவார்கள் என்றும் தெரியவருகிறது. பம்பாயில் வந்திறங்கின உடன் அவர்களை இந்

தியாவின் முக்கிய பிரதிநிதிகள் ஆனந்தத்துடனும், நன்றியறிவுடனும், எதிர்கொண்டு அழைப்பார்களென்று நம்புகிறோம்.

* * *

ஏன் எனில் எக்காரியத்திற்காக இங்கிலாந்து சென்றனரோ அக்காரியம், ஒருவாறு சந்தோஷகரமாக ஜயம் ஆயிற்று என்று தோன்றுகிறது. இந்தியாவுக்கு சுயாட்சி இனிக் கிடைக்கப் போவதற்கு அத்தாட்சியாக இப்போது முக்கியமான இராஜீய சீர்திருத்தங்களைப் பெறுவதற்காக ஸ்ரீமதியும், இன்னும் இந்தியத்தலைவர்களில் அநேகரும் இங்கிலாந்து சென்றிருந்தனர். சட்ட மசோதாவைப் பற்றி பரியாலோசனை செய்வதற்காக காமன்ஸ் ஸபையாரும் பிரபுக்கள் சபையாரும் கூடி ஒரு பொதுக் கமிட்டி நியமித்தார்கள். அக்கமிட்டியார் எல்லாத்திறத்தாரையும் விசாரித்து, தங்கள் முடிவைத் தெரிவித்திருக்கின்றனர். அம்முடிவானது இந்தியருக்கு முழுதும் திருப்திகரமானதல்ல வென்றாலும், முக்கியமான பல அம்சங்களில் திருப்திகரம் என்றும் அம்மையாரவர்கள் கூறுகிறார். இந்தியாவின் மேம்பாட்டுக்காக இங்கிலாந்தில் உழைத்த எல்லாரையும் உத்தேசித்து, அம்மையவர்கள் எவ்வளவோ தீவிரமாயும், உற்சாகமாயும், பிரயோஜனத்துடனும் உழைத்திருப்பதால் இந்தியாவானது அம்மையவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுளது. நம்முடைய கைம்மாற்றை எதிர்பார்த்து இக்கருமத்தை அவர்கள் செய்திலர் எனினும், நன்றிகொல்லாமை என்ற நற்குணம் வாய்ந்த அனைவரும் தம்முடைய கிருதஜ்ஞதையைக் கூறுதல் கடனும்.

* * *

நவம்பர் மீ 17உ தோறும் நமது பிரஹ்மஞான சபையின் பிரதிஷ்டை தினத்தை உலகெங்கும் கொண்டாடுவது இப்போது ஸ்திரமான வழக்காய் வருகிறது. அவ்வழக்கமானது மிகவும் பொருத்தமானதும் பெரும்பயன் விளைக்

கக்கூடியதுமாக விருக்கின்றது. பிரஹ்மஞான சபையின் அங்கத்தானகவிருந்து அதன் மூலம் அடைந்த அறிவின் பெருமையாலும், மனத்தின் அமைதியினலும், உண்மையான ப்ரோத்ஸாஹ சக்தியாலும் பயனடைந்தவனுக்கு அதன் பெருமை நன்கு விளங்கும். ஆகையால் ஒரு நன்மையை யடைந்தவன் பிறருக்கும் அந்நன்மையை அடையும் வழியைக்காட்டவேண்டும் என்று முயற்சிப்பது நியாயமாகையினல் பிரஹ்மஞான சபையைச்சேர்ந்து பெரும் பயன் எய்தியவர்கள் பொது ஜனங்களுடைய கூட்டத்தில் தாங்கள் பெற்ற பயனை பலர் அறியக்கூறுவது பொருத்தமாகின்றது.

***

துக்கப்படுபவர்களை தேற்றுகிறது. வலியின்மையால் மயங்குபவரை உத்ஸாகப்படுத்துகிறது. சுய நலம் கருதுபவரை அதை விட்டுப் பிறர் நலத்தை நாடும்படி தூண்டுகிறது. இம்மையை நம்பியவரை மறுமையில் நம்பிக்கை கொள்ளும்படி செய்கிறது. தூக்கத்தில் ஆழ்ந்தவரை சுறுசுறுப்புடன் வேலை செய்யும்படி செய்கிறது. தன் நினைவைத் தவிர வேறு நினைவில்லாதவரை உயர் நலம் வாய்ந்த விஷயங்களை நாடும்படி செய்கின்றது. தான் வேறு இதரர் வேறு என்று எண்ணுவோரை யாவரும் சகோதரர் என்று அறியச்செய்கின்றது. பிரஹ்மஞானமானது இன்னும் எவ்வளவோ நன்மையைச் செய்கின்றது. அவ்விதம் பெரும் பயனை அடைந்தவன் அப்பயன்களை தான் மட்டும் அனுபவிக்க விரும்புவானே? இல்லை. பிறருக்குச்சொல்லாமல் இருக்கமுடியாது.

***

இச்சபை ஸ்தாபிக்கப்பெற்று 44 வருடங்கள் ஆகின்றன. இச்சபையின் உண்மையான ஸ்தாபகர்கள் மகா சக்தியும் பெருமையும் வாய்ந்த மகாத்மாக்களாயினும், இவ்வுலகில் அவர்களது பிரதிநிதிகளாய் விளங்கியவர்

னல் ஆல்காட், ஹெலினாம்பாள் பிளவாட்ஸ்கியம்மான், ஆகிய இருவரும் அவர்கள் காலத்தில் எவ்வளவு அவதூறுக்கிலக்கானார்கள். அவர்களுக்குப்பின்னர் அவ்விருவர் ஸ்தானத்தையும் ஒருங்கே வகித்த மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள்தான் எவ்வளவு இடருற்றனர். பிரஹ்மஞான சபைக்குள்ளாகவும் வெளியினின்றும் பன்முறை குழப்பங்கள் நேரிட்டன. ஆனால் ஒவ்வொரு தாக்குதலினின்றும் நமது தலைவரும், நமது சபையும் ஜயபேரியுடன் முன்னைக்காட்டிலும், மிகுந்த பலத்துடனும், கௌரவத்துடனும் வெளிவந்துள்ளது பாராட்டற்பாலது. உலகத்தில் இதுதான் கஷ்டங்களுடைய பிரயோஜனம், கஷ்டங்களை ஜயித்து கஷ்டத்தையே பலமாக மாற்றுவது. பலமற்றவர்களும், ஜீவ சக்தியழிந்தவர்களும் தான் தாக்குதலால் மனமுறிந்து ஒழிந்து போகிறார்கள். ஆனால் ஜீவசக்தியுள்ளவர்களோ கஷ்டங்களையோ இடையூறுகளையோ, நேரிடும் விபத்துக்களையோ, தங்களுடைய உதவியாகச் செய்கிறார்கள். கஷ்டங்கள் பலஹேதுவாக மாறுகின்றன. இது ஒரு ரஸவாதம். ஒரு காட்டில் பெரும் புசலடிக்கின்றது. பலமற்ற பல மரங்கள் சாய்ந்துவிடுகின்றன. ஆனால் விருக்ஷ ராஜாக்கள் என்ற பலமுள்ள விருக்ஷங்களோ காற்றினால் பலமாய் வேரூன்றி உறுதியாய் நிற்கின்றன. ஆகையால் மேற் கூறிய தாக்குதல்கள் பயனற்றவை யென்று யார் கூற முடியும்? தபஸ் செய்யப் புகுந்த தபஸ்வியைக் கலக்க முயலும் பரீக்ஷைகள் பயனற்றவையா? அவ்விதக் கலக்கங்களால் கீழே போகாத தபஸ்வியல்லவோ ரிஷி யெனப்படுவர், இன்னும் மிகுந்த பலமாய் தபஸ் செய்ய, பிரஹ்ம ரிஷி யென்றும் அழைக்கப்படுவர். இவ்விதம் பலப்படுவதெல்லாம் லோக ஸங்கிரஹத்திற்காகவே.

***

ஆனால் பிரஹ்ம ஞான சபை இனிச் செய்ய வேண்டிய காரியமென்ன இருக்கின்றது? மதத்தில் பராமுகமாய் இருந்த உலகத்தை மதத்தில் நம்பிக்கையுள்ளதாய்ச் செய்துவிட்டது. சகோதர பாவம் என்ற உண்மையை உலக

த்தார் அறியும்படி போதித்திருக்கின்றது. ஆகையால் அதன காரியம் முடிந்து விட்டதே, யென ஒரு சிலர் சங் கிக்லாம். ஆனால் அது பெருந் தவறாகும். சகோதர பாவத் தை நன்கு உணர்ந்தவரும, உண்மையான ஆத்மஞான முணர்ந்தவர்களும் தான் இனிவரும் காலத்தில் மிகுந்த ஊக்கத்துடனும, பிடிவாதத்துடனும் உழைக்க வேண்டி யிருக்கின்றது. சண்டையின் பயனாக, உலகத்திலேயே மாறு பாடுகள் உண்டாய்க் கொண்டிருக்கின்றன. எங்கு திரும்பி ப்பார்த்தாலும், ராஜாங்க விஷயத்திலும, ஜனஸமூகக்கட் டுப்பாட்டிலும, கல்வி விஷயத்திலும, சமய நெறிகளிலும், பழைய ஏற்பாடுகள நீங்கிய புதிய ஏற்பாடுகள் தலைப்படும் சமயமாயிருக்கின்றது. ஆகையால இப்போது, உண்மை யறிவும், சகோதர பாவமும வாய்ந்த பிரஹ்மஞான சபை யினா உழைக்காமல் எககாலததில உழைப்பது பொருந் துமா? ஆகையால் இனி வரும் வருஷங்களை, நாளைவரும் 1920 ஆம் வருஷமே, நாம நன்றாய் உழைப்பதற்குத் தரு ணம். பரமனது வருகைக்கு ஏற்றபடி உலகைச் சீர்படுத்த முயல்வோமாக! யாவரும உதவுக! எத்தன்மையனாகிலும், எக்குணத்தனாகிலும், எந்நிலைமையனாகிலும், எம்மதத்தின னாகிலும, ஒவவொருவரும உதவும சமயம் இதுவே.

* * *

சமரஸபாவம், சகோதர தத்துவம் என்ற இரண்டு உண்மைகள உலகத்தாரால் நன்கு அறியற் பாலனவாம், இரண்டு சகோதரர்களும் பாரமார்த்திக தசையில சமமா னவர்கள தான் ஏன் எனில் இருவரும ஈசுவரனாகிய பெரு நெருப்பினின்று வெளிக்கிளம்பிய இரணடு நெருப்புத்துண் டுகளல்லவா? ஆனால் வியாவஹாரிக நிலைமையில் இருவ ரும அவர்களுடைய உபாதிகளாகிற கோசங்களை யுத்தே சித்து தாரதம்மிய முள்ளவர்கள தான. இக்காலத்திலோ ஜனங்கள மேற் கூறிய வித்தியாஸங்களைப் பெரிதும பாரா ட்டுகிறார்களே யொழிய உண்மையானதும், வாஸ்தவத்தில்

முக்கியமானதுமான ஒற்றுமையை உணர்கிறார்களில்லை. நானமேல், அவன் கீழ், நான் நாகரீகமுள்ளவன் அவன் நாகரீகமற்றவன், நான் உயர் குலத்தோன் அவன்கீழ்குலத்தோன் எனக்குரிமையுண்டு, அவனுக்கில்லை. இவ்விதமான வழக்குகள் தான தற்போது மேற்படுகின்றன. சகோதரபாவமென்பது புதிதாக ஏற்படவேண்டிய வஸ்துவல்ல, கற்பனையால் உண்டாக்கவேண்டிய சரக்கல்ல. இயற்கையாய் உண்டாயிருக்கும் உணர்வு. அறிவின்மையாலும, மயக்கத்தாலும், அகங்கார, மமகாரத் தடிப்பினாலும் அவ்வுண்மையை ஜீவர்கள அறியும்படி அடிக்கடி அறிவுறுத்தவேண்டுவது பிரஹ்மஞான சபையோரின் கடமையாகும். அங்ஙனம் அறிவுறுத்தப்படின் கொஞ்சம் கொஞ்சமாக வேற்றுமை பாவம் நீங்கி ஒற்றுமை யுணர்வை ஜனங்கள் அடைவார்கள். அங்ஙனம் உண்டாகும்வண்ணம் உழைப்பதே யுண்மையானசேவை.

***

"காணம் என்றால் வாயைத் திறக்கும், கடிவாளம் என்றால் வாயை மூடும்" என்பது பழமொழி. உற்று நோக்கின், நம்மில் எத்தனையோ பேர் இப்பழிமொழியாம் பழமொழிக்கு இலக்காகின்றனர்! ஒவ்வொரு காரியத்தையும் ஆலோசிக்கும்போது, இதனால் எனக்கு என்ன இலாபம் கிடைக்கும என்று நாம கேட்கின்றோமேயொழிய, இதைச் செய்வதால் நாம் என்ன உபகாரம் செய்யமுடியும் என்று யோசிக்கிறோமா. நான் என்ன அடையலாம? என்பது கேள்வி, நான் என்ன கொடுக்க முடியும்? என்பது அல்ல. இது சரியா என்று ஆலோசித்துப் பார்க்க, ஒவ்வொருவரும, பிந்திய கேள்வி தான சரி யென்று சொல்லவேண்டும.

ஆர். அரங்கசாமி ஐயர்.

(209-ம் பக்கம் பார்க்க.)

தத்துவஞான அனுஷ்டானம்.

பிரதி நிமிஷத்திலும் பிரதி வியவஹாரத்திலும் தத்துவ ஞானம் நமக்கு ஸம்மந்தப்பட்டிருக்குமாகையால் அது நமது அனுஷ்டானத்திற்கு அதிக அவசியமுள்ளதாயிருக்கின்றது. சிருஷ்டி விஷயமான பெரிய பெரிய விஷயங்களுக்கு ஸம்பந்தப்பட்ட சகலவித தத்துவங்களைத் தத்துவஞானம் சொல்வதுமன்றி தின வியவஹாரங்களில் நமக்கு அவசியமான சின்னச்சின்ன விஷயங்களைக் குறித்தும் ஸ்பஷ்டமான போதனைகளையும் தெரியச் செய்கின்றது. புத்தியாலாவது, நாம் ஒரு தடவை தத்துவஞான போதனைகளைக் கிரஹிப்போமேயாமாகில், அவைகள் நம்மை எப்பொழுதும் கைவிடா. சிருஷ்டியில் ஜீவபூதவிகாஸ தத்துவங்கள் எப்படி அடங்கியிருக்கிறனவோ, அவ்விதமே ஜீவர்களின் ஸ்வபாவங்களில் பரமார்த்த தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன. மனிதன் அதற்கனுகுணமாக அனுஷ்டியாமல் ஒருவேளை திரஸ்கரிக்கக் கூடுமே ஒழிய, அதினின்று தான் வேறுவதற்கு ஸாத்தியமாகாது. வீட்டிலும், வியவஹாரத்திலும், கிரீடா விநோதங்களிலும், பரமார்த்த தத்துவங்கள் மனிதனை அனுசரித்தே நிற்கும். மனிதன் எதை யெதைக் கேட்பானோ, எதை யெதைப் பார்ப்பானோ, அவைகளுக்கெல்லாம் பரமார்த்த தத்துவங்கள் வியாக்கியானம் செய்து கொண்டிருக்கும்.

மனிதன் அனுஷ்டிக்கத் துவக்குவானேயாமாகில் அவன் சித்தவிருத்தியெல்லாம் ஸம்பூரணமாக மாறக் கூடிய பரமார்த்த தத்துவங்கள் மூன்று உள. அவையென்னவெனில்:—

1. மனிதன் அனேக ஜன்மங்கள் எடுத்து கிரமக்கிரமமாக விருத்தியாகி முடிவில் பரிபூர்ணஸ்திதியை அடையக் கூடிய ஜீவனாக இருக்கிறான்.

2. ஈசுவரனுடைய ஆஜ்ஞையான ஜீவபூத விகாஸ நியமத்திற்குச் சஹாயம் செய்வதால் ஜீவன விருத்தியாகிறான்

3. முதலில் மானிட சகோதரர்களுக்கு உபகாரம் செய்யும் கிரமத்தைக் கற்றுக்கொள்வதால் ஈசுவர சங்கர்ப் பத்திற்கு ஸகாயத்தைச் செய்பவனாகிறான்.

மனிதன் ஜீவனே ஒழிய சரீரமல்லவென்று முதல் தத்வம் போதிக்கின்றது. சரீரமானது ஜீவனால் உபயோகப்படுத்தப்படும் ஒரு உபகரணமேயன்றி வேறல்ல. ஜீவனுடைய கார்யத்திற்கு இது பிரயோஜனப்படாதபொழுது இதை அவன் நீக்குவான். இது மரண காலத்தில் ஸம்பவிக்கும். மனிதன் பூமியில் அனேக ஜன்மங்களெடுத்து, ஒவ்வொரு ஜன்மத்திலும் பலவிதங்களான அனுபவங்களை அடைந்து, முடிவில் விவேகத்தையும், சக்தியையும் மனோஹரத்துவத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சம்பாதிக்கிறான் என்பதாகக்கூட இந்த முதலாவது தத்துவம் போதிக்கின்றது.

உலக அபிவிருத்தியே ஈசுவர சாஸனமானபடியால் ஸதா உலக நன்மைக்கடுத்த கார்யங்களிலேயே ஈடுபட்டிருத்தல் மானிட ஜன்மத்தின் உத்தேசமே ஒழிய கேவலம் தியானாரூடர்களாயிருத்தலன்று என்பதாக இரண்டாவது தத்துவம் போதிக்கின்றது. கடவுள் நியமனத்திற்கு எவ்வளவு அனுகுணமாக ஜீவன் நடந்துகொள்வானோ அவனுக்கவ்வளவு சுகமும், விவேகமும், மேன்மையும் லபிக்கும்.

மானிடர்கள் எல்லோரும் அசோதரமான ஒரு சரட்டால் இணைக்கப்பட்டிருப்பதால் விருத்திக்ஷயம் எல்லோருக்கும் ஸமமாக உண்டாகும் என்பதாகவும், எல்லோருடைய விருத்திக்காகப் பாடுபடுவதால் பிரதி மனிதனும் விருத்தியாவானென்பதாகவும் மூன்றாவது தத்துவம் போதிக்கின்றது. பிரேமையும் லோகோபகார புத்தியும் மனிதனுடைய விருத்திக்கு அத்தியாவசியமான குணங்களாயிருக்கின்றன.

இந்த மூன்று தத்துவங்களையும் ஜீவன் பிரதி நிமிஷமும் அனுஷ்டிப்பதற்கு அவகாசமிருக்கிறது. அது எப்படி யென்பதாக விசாரிப்போம்.

வீட்டில்.

மேற் குறித்த தத்துவத்திரயங்களையும் ஊன்றிப் பார்க்கில், வீடென்றால் என்ன? பரிபூரணஸ்திதியை அடைய வேண்டியதற்காகப் பரஸ்பரம் சஹாயத்தைச் செய்து கொள்வதற்காக வெவ்வேறு ஜீவர்கள் ஒரு ஸ்தலத்தில் சேர்ந்து இருக்கும் வாசஸ்தலத்திற்கு வீடெனப் பெயர். அவ்விதம் ஒரே குடும்பமாகச் சேரும் ஜீவர்கள் அகஸ்மாத்தாய்ச் சேர்பவர்களன்று. இளையோர் பெரியோர்களும், எஜமான் சேவகர்களும், அதிதிகிரஹஸ்தர்களும், முடிவில் பசுவாதிகளும், பரஸ்பரம் சஹாயத்தைச் செய்துகொள்ளும் நிமித்தம் ஏக குடும்பமாக ஓரிடத்தில் சேர்வார்கள். ஈசுவரனுடைய கட்டுப்பாட்டில் அகஸ்மாத்தென்பதே கிடையாது. ஒரே கிரஹத்தில் சேரும் ஒவ்வொருவரும் அற்ப காலமோ அல்லது தீர்க்க காலமோ, அந்த கிரஹத்தில் இருந்து பின்னால் வெளிப்பட்டுச் செல்வார்கள். அவர்கள் அந்த வீட்டிலிருக்கும்பொழுது குடும்பத்தில் இதர ஜீவர்களுக்குச் சஹாயம் செய்தல் அவர்களுக்குக் கடமையாகும். அந்த சஹாய கார்யம் கடமையாக இருப்பதால் அக்கார்யம் முடிந்தவுடன் சென்றுவிடுவார்கள். அவர்கள் அபிவிருத்தியாக வேண்டின், தங்கள் கார்யத்தை ஸாத்தியப்பட்ட மட்டில் நன்றாய் நிர்வஹிக்கவேண்டும். வீடெனின், ஜீவர்களின் விருத்திக்காக ஏற்பட்ட ஒரு ஆலயம். குடும்பத்திற்குச் சேர்ந்த ஒவ்வொருவனும் சீக்கிரம் பரிபூரணஸ்திதியை அடைவதற்குச் சாதகமான ஏற்பாடுகள் எந்த வீட்டில் அமைக்கப்பட்டிருக்குமோ அதுவே அந்த ஆலயமெனச் செப்பலாகும்.

வீட்டில் ஜீவர்களுக்குப் பலவிதங்களான சம்பந்தங்களிருக்கும். ஒவ்வொரு சம்பந்தத்திலும் பரமார்த்த தத்

துவத்தை அனுஷ்டிக்க அவகாசமிருக்கும். மாதா பிதாக்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும், பாரியை பர்த்தாக்களுக்கும், எஜமான் சேவகர்களுக்கும், தாதா அதிதிகளுக்கும், உள்ள ஸம்பந்தத்தைப்பற்றி தத்துவ ஞானம் எதைப்போதிக்கின்றது?

முதலில் மாதா பிதாக்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்து விசாரிப்போம். குழந்தைகள் இரண்டு வித ஸ்வபாவமுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் ஜீவர்களாயிருப்பதினால் ஜீவ ஸ்வபாவம் ஒன்றும், சரீரத்தினிடமிருப்பதால் சரீரஸ்வபாவம் ஒன்றும், அவர்களுக்கு ஸஹஜமாயிருக்கும். மாதா பிதாக்கள் குழந்தைகளுக்குச் சரீரத்தை மாத்திரமே கொடுக்கிறார்களேயொழிய, ஜீவஸ்வரூபர்களான அக்குழந்தைகளுக்கு ஜீவத்தன்மையைக் கொடுக்கிறதில்லை. அது ஸ்வதந்தரமாய் இருக்கின்றது. தாய் தகப்பனளிக்கும் சரீரத்தின் மூலம் தாங்கள் விருத்திபாகவேண்டியவர்கள் என்பதாக வெண்ணி, குழந்தைகள் அந்தச் சரீரத்தை ஸ்வீகரிப்பார்கள். சரீர சிருஷ்டியால் மாத்திரம், தாய் தகப்பன்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெரியவர்களென்று சொல்லலாமே யொழிய, ஜீவசிருஷ்டியினின்று அல்ல. ஜீவர்கள் எல்லோரும் ஸமானர்கள். சில சமயங்களில், தாய் தகப்பன்களை விடக் குழந்தைகளே ஞானத்தில் விசேஷித்தவர்களாயும், அதிக சக்தியுள்ளவர்களாகவும், மிகவும் பரிபக்குவம் உடையவர்களாயுமிருப்பார்கள்.

ஆனது பற்றி, குழந்தைகளைத் தங்கள் சொத்தென்பதாக எண்ணக்கூடாது. ஜீவஸ்வரூபர்களான குழந்தைகள் பால்ய யௌவன அவஸ்தைகளில் தமது சரீரங்களை நன்றாய் அடக்கமுடியாமல் இருப்பார்களாகையால், அக்காலத்தில் தாய் தகப்பன்கள் அந்தச் சரீரங்களைப் பரிபாலிப்பார்கள். "என் குழந்தை" என்று சொன்ன மாத்திரத்திலேயே அக்குழந்தையின் அதிருஷ்டத்தில் தாய் தகப்பன்

களுக்கு அதிகாரமில்லை. தங்களைப் போல் ஜீவ ஸ்வரூபர்களாயுள்ள தங்கள் குழந்தைகளுக்கு விருத்தி மார்க்கத்தில் ஸஹாயம் செய்யும் அதிகாரம் மாத்திரமே தாய் தகப்பன்களுக்கு உளது. பரோபகாரத்தைச் செய்வதாலேயே ஜீவ ஸ்வரூபர்களான தாய் தகப்பன்களும் கூட விருத்தியாகக் கூடியதாயிருக்கின்றமையால், அவ்வித உபகாரத்தைச் செய்ய ஸாத்தியமாகும் வண்ணம் ஜீவர்களை அவர்களுக்குக் குழந்தைகளாக ஜனிக்கும்படி கர்ம தேவர்கள் செய்கிறார்கள்.

சிசு சரீரத்திலுள்ள ஜீவன் தனது சரீரத்தை கிரமமாய் ஸ்வாதீனப் படுத்திக் கொண்டு அதன் மூலம் வேலை செய்வதற்கு அனுகூலமாகும்படி சஹாயம் செய்தல் தாய் தகப்பன்களின் தர்மமாக விருக்கிறது. அந்த ஜீவன் கடந்த ஜன்மங்களில் சம்பாதித்த பலவிதமான அனுபவங்களை தன்னுடன் கூடக் கொண்டுவரும் பின்னர் வெகு காலத்திற்குப்பிறகு ஏதோ ஒருபெரிய மஹத்தான காரியத்தைச் செய்வதற்கு அந்த ஜீவன் இப்பொழுதினின்றே முயற்சித்துக்கொண்டிருப்பான். ஒரு குடும்பத்தில் ஜனிப்பதாலே அந்த ஜீவனுக்கு அதன் கர்மத்திற்கு அனுகுணமான ஸௌகரியங்கள் பிராப்தமாவது மன்றி அதன் அபிவிருத்திக்கு வேண்டிய அனுபவங்களையும் சம்பாதித்துக்கொள்வதற்கு ஹேதுவுண்டாகும். அந்த ஜீவனுக்கு அவ்வித அனுபவங்கள் நேர்வதற்கு சஹாயம் செய்தல் தாய் தகப்பன்களின் கடமையாக இருக்கிறது.

தாய் தகப்பன்கள் தங்களுடைய இக்கடமையை நன்றாய் நிறைவேற்ற எண்ணின மாத்திரத்தில் முதல் முதல் குழந்தைகளின் சரீர ஆரோக்கியத்திற்கு அனுகூலமானஸ்திதியை உண்டாக்கல் வேண்டும். ஆரோக்கிய சாஸ்திரத்தையும் சரீர ஆரோக்கிய வழிகளையும் நன்றாய்த் தெரிந்துகொண்டு குழந்தைகளின் தேக ஆரோக்கியத்திற்கு ஸஹாயகாரமாயுள்ள நல்ல சங்கர்ப்பங்களை உண்டாக்குதல் வேண்டும்.

அவ்விதமே குழந்தைகளின் காம சரீரத்தினுடையவும் மனோமய சரீரத்தினுடையவும் ஆரோக்கிய ஸ்திதிக்கு

உபயுக்தமாயுள்ள பக்க ஸௌகரியங்களையும் உண்டாக்குதல் வேண்டும். பால்ய தேகத்தினிடமுள்ள ஜீவர்கள் எல்லோரும் பரிபூரண ஸ்திதியை அடைந்தவர்கள் என்பதாகச் சொல்லவொண்ணுது. கடந்த ஜன்மங்களினின்று நல்ல அல்லது கெட்ட வாசனைகளைத் தம்முடன் கூட இந்த ஜன்மத்திற்குக் கொண்டுவந்திருப்பார்கள். அவர்களிடம் அந்த வாசனைகள் பீஜ ரூபங்களாயிருக்கும் குழந்தைகள் பால்ய தசையில் இருக்கும்பொழுது அவர்களிடமுள்ள கெட்ட வாஸனைகளைப் போக்கடித்துத் ஸத்வாஸனைகளையே விருத்திப்படுத்துவதற்குத் தாய் தகப்பன்கள் சஹாயம் செய்யலாம். பிரதி ஜீவனும் ஸ்வப்பிரயத்தனத்தாலேயே தன்னுடைய துஷ்ட வாசனைகளைப் போக்கடித்துக்கொள்ள வேண்டுமென்ற பேச்சு யதார்த்தம்தான் ஆயினும் இதரர்கள் அவனுக்கு சஹாயம் செய்யின், அவன் காரியம் சுலபமாகும். மேலும் பால்ய தசையிலுள்ள தாது குழந்தைகளின் பேரில் தாய் தகப்பன்கள் ஸத்வாஸனைகளையே வர்ஷிக்கக் குழந்தைகள் சீக்கிரத்தில் விருத்தியாவார்கள்.

பெற்றோர்கள் தங்கள் எண்ணங்களாலும் ஆசைகளாலும் உண்டாகக்கூடிய சூக்ஷ்மமான பலன்களை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். குழந்தைகள் பூர்வ ஜன்மங்களினின்று தங்கள் ஸ்வபாவத்தில் குரோத பீஜங்களைக் கொண்டு வந்திருக்கின், பெற்றோர்கள் தங்கள் மனதிலாகட்டும் வெளியிலாகட்டும் எவ்வளவேனும் குரோதத்தை அடையக்கூடாது. அப்படி அடையின், குழந்தைகளிடமுள்ள குரோத பீஜங்கள் முளைக்கும். பெற்றோர்கள் பிரீதி வாத்ஸல்யங்களை உடையவர்களாயிருந்தால், குழந்தைகளிடம் பிரீதிவாத்ஸல்யாதி ஸத்குணங்கள் விருத்தியாகி, அதற்கு எதிரான துஷ்டவாசனைகள் நசிக்கும். நல்ல கெட்ட வாசனைகள் கலப்பாயுள்ள குழந்தைகள் பேரில் பால்யத்தில் பெற்றோர்கள் ஸத்ஸங்கற்பத்தையே வர்ஷித்துக் கொண்டிருக்க அக்குழந்தைகள் நல்லவர்களாய்ப் பரிணமித்துத் தங்கள் ஜீவிதத்தை ஆரம்பிப்பார்கள்.

தங்கள் குழந்தைகள் பேரில் ஸதா ஸத் சங்கற்பங்களையே வியாபிக்கச்செய்தும் அக்குழந்தைகள் துஷ்ட நடபடிக்கை உள்ளவர்களாய் ஏற்படும் பக்ஷத்தில் அது பெற்றோர்களுடைய தோஷமன்று. தங்களிடமுள்ள துஷ்ட பீஜங்களை நிக்கிரஹம் செய்யக்கூடிய அளவு சக்தி அந்த பால்ய ஜீவர்களுக்குப் போதாதென்பதாக அர்த்தம்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைச் சன்மார்க்கத்தில் நடப்பிவிக்கப் பிரயத்தனம் செய்யலாமே ஒழிய, குழந்தைகள் அவ்விதம் நடவாது தங்கள் இஷ்டானுசாரமாய்ப் போவார்களேயாயின், என்ன செய்யக்கூடும்? அவ்வித ஜீவர்கள் பிழைகளைச் செய்து அவைகளின் துவாரா தாங்கள் கஷ்டப்பட்டு இதரர்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்துப் பாடங்களைக் கற்றுக்கொள்வார்கள். பெற்றோர்கள் கடமையை நிறைவேற்றின், பகவத் ஆக்ஞையை நிறைவேற்றினவர்களாவார்கள். பெற்றோர்கள் ஜீவஸ்வரூபர்களான தங்கள் குழந்தைகளின் ஸ்வபாவங்களை உண்டாக்கமுடியாது. ஒவ்வொரு ஜீவனும் தனது முக்தியைத் தானே சாதித்துக்கொள்ளவேண்டும். பிழை செய்த மாத்திரத்திலேயே ஜீவனுக்கது பெரிய விபத்தென்பதாக எண்ணக்கூடாது. ஏனெனின், ஜீவனுக்கு அநேக ஜன்மங்கள் உண்டு, ஆனபடியால், ஏதோ ஒரு ஜன்மத்தில் அவன் தன் பிழையைத் திருத்திக்கொள்ளக் கடவன். அவனுக்கு வேண்டிய சமஸ்த அவகாசங்களையும் பகவானது நியமம் கொடுக்கும். அவன் சத்துவந்தனாக, சத்குண சம்பன்னனாகப், பரிணமிக்கும் வரைக்கும் அவகாசத்திற்குக் குறையிராது. தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்து தங்கள் குழந்தைகள் சத்குண சம்பன்னர்களாகாவிடின், பெற்றோர்கள் துக்கிக்க அவசரமில்லை. அவகாசங்கள் கிடைத்தபொழுது, அவற்றைக் கைக்கொள்ளாமல் விட்ட குழந்தைகளுக்கு மீளவும் மீளவும் அவ்வித அவகாசங்கள் கிடைப்பது யதார்த்தமே ஒழிய சில கஷ்டங்களை அனுபவித்த பின்னர், அவர்கள்

அந்த அவகாசங்களைக் கைக்கொள்ளக் கற்பார்கள். இவ்வித சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் தங்கள பிள்ளைகளிடத்திலுள்ள அக் குற்றங்களை எண்ணாது அவர்களிடத்திலுள்ள சற்குணங்களையே ஸ்மரித்தல் வேண்டும். ஏனெனின், குற்றங்களை நினைப்பதால் அந்த தோஷங்கள பிள்ளைகளிடம் இன்னும் அதிகமாகுமே ஒழிய குறைவுபடாது. அதற்கு பதிலாகக் குழந்தைகளிடமுள்ள சதகுணங்களைப் பாவிக்கின் அந்த சத்குணங்களை பிரபலமாகும்.

பிள்ளைகளைப் பழக்குவதிலுண்டாகும் முக்கியமான ஒரு கேள்வி என்னவென்னின், அவர்கள் கெட்டவைகளை விட்டு நல்லவைகளையே அவலம்பிவிக்கக் கூடியதாய்ச் செய்வது எவ்விதம்? அடித்தல் அவசியமென்பதாக நாகரீகமுள்ளவர்களெல்லாம் இதுவரைக்கும் நம்பியிருத்தல் வெகு துரதிஷ்டமாக விருக்கிறன்து. குழந்தைகளைப் பழக்கும் கடமை பெற்றோர்களுடைய தாயிருக்கினும் பிள்ளைகளை பலாத்காரம் செய்தல் அவர்களுக்கு ஞாயமாகாது. அடித்தல் குழந்தைகளுக்கு நல்லதென்பதாகச் சொல்லுதல் அனுபவத்திற்கு விரோதமாயிருக்கிறது. குழந்தைகளின் சரீரங்கள் பால்ய தசையில் கொஞ்ச வருடங்கள்வரைக்கும் ஜீவர்களால் வீக்ஷிக்கப்பட்டிருக்குமே ஒழிய ஸம்பூரணமாக ஆக்கிரமிக்கப்பட்டிராது. அக்காலத்தில் அதனிடம் வேலை செய்யும் பிரஜ்ஞை பசுப்ராயமாயிருக்கும். குழந்தைகள் அக்காலத்தில் செய்யும் வேலைகள உளளே இருக்கும் ஜீவர்களுக்குச் சம்பந்தித்ததா யிராது.

(தொடரும்.)

ஸி. ஜினராஜ தாஸர்.

[ஸ்ரீமான் ஸி. ஜினராஜ தாஸர் அவர்கள் 1917ம் ஞு ஜூலை மீ அடையார் புல்லட்டீனில் இங்கிலீஷ் பாஷையில் பிரசுரித்த விஷயத்தின் மொழி பெயர்ப்பு. வி. ஆர். நாயுடு, மொழிப்பெயர்ப் பாசிரியர்.]

தலைவரும் அவர் கடமையும்.

இவ்வுலகத்திற் றோன்றிய பல வேறு வகைப்பட்ட ஜீவராசிகளும், தத்தமக்கேற்ற ஒவ்வொரு தலைவனைப் பெற்று நடைபெறுவதை யாண்டும் பிரத்தியக்ஷமாகப் பார்த்து வருகிறோம். அவ்வாறு ஒவ்வொரு தலைவன் கீழ் அடங்கி நடந்துவரும் ஜீவராசிகளுள், எல்லாப் பிறப்பிலும் உயர்ந்ததும், தர்மாதர்மங்களைப் பகுத்தறியும் மனவுணர்வு பெறுதற்குக் காரணமும் ஆகிய மானிட ஜன்மத்திற் றோன்றிய மனிதவர்க்கத்தாரைச் செவ்வனே நடத்தவல்ல தலைவன் இத்தகையன் என்பதையும், அவன் செய்யும் கடைமைகள் இன்ன இன்ன என்பதையும் ஒவ்வொரு மனிதனும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் அவற்றைப் பற்றி நாமும் சிறிது ஆராய்வோம்.

தலைமையாவது ஒவ்வொரு வகுப்பிலும் பிறருக்கில்லாத சிறப்புக் குணங்களால் ஒவ்வொருவர் உயர்ந்திருக்குந் தன்மையாம். அது பொதுவும், சிறப்புமென இருவகைப்படும்.

பொதுவாவது, கல்வி, அறிவு, நன்னடை, ஆரோக்கியம், உலகியல், மதம், ஜாதி, நாகரீகம் முதலியவற்றிற் குறைபாடுற்றிருக்கும் தம் இனத்தாரைக் காலதேசங்களுக்கேற்பச் சீர்திருத்தி முற்படுத்துதற் பொருட்டு, அவ்வவ்வினத்து அறிஞர் பலரால், பரோபகாரச்சிந்தையும், தன்னலமறுப்பும், காலதேசங்களுக் கேற்ப அவ்வக் காரியங்களை நிர்வகிக்கும் ஆற்றலும், உடைமை காரணமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பெரியோனின் தன்மையாம்.

சிறப்பாவது, தனக்கும் தன்னால் விரும்பப்பட்டாருக்குமே நன்மை செய்யுங்காரியங்களிற் றலைமை வகித்தல். அது, தனக்கும், தன்னினத்தார்க்குமே நன்மை செய்யும்

உரிமையுடையதாதலாலும், அளவற்ற பிரிவினையுடையதாதலாலும், பொதுத் தலைமை போல உலகிற்குச் சிறந்த நன்மை பயவாமையாலும், பொதுத் தலைமை கூறவே அதனுள் அடங்குமாதலாலும், அதனை விடுத்து எல்லா நன்மைக்கும் காரணமாயுள்ள பொதுத் தலைமையே ஈண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுவும் ஜன ஸமுதாயத்தின் கல்வியையும், அறிவையும் விருத்தி பண்ணுவதற்காக ஆங்காங்குள்ள புத்திமான்களாலும் செல்வவந்தர்களாலும், துரைத்தனத்தாராலும் ஏற்படுத்தப்பட்ட ஆங்கிலக் கலாசாலை, ஸம்ஸ்கிருதக் கலாசாலை, தமிழ்க்கலா சாலை, சர்வ கலா சங்கம முதலிய கல்விப் பிரிவினையில் தலைமைவகித்தலும், பலவேறுவகைப்பட்ட தொழில்களை நன்கு தெரிந்து செய்வதற்கு அநுகூலமான கைத்தொழிற் சங்கங்களிற் றலைமை வகித்தலும், பல நாடுகளிலும், ஊர்களிலும், அவ்வப்பொழுது நிகழும் புதுமைகளையும், நாகரீகத்தையும், நடை உடை பாவனைகளையும் வைதீக லௌகீக சாஸ்திர விஷயங்களையும், பண்டிதபாமர ஜனங்களெல்லோரும் நன்கு தெரிந்து கைக்கொள்ளவேண்டுவனவற்றைக் கைக்கொண்டு, மேன்மையடையச் செய்வனவும், உலகத்தில் நடைபெறும் நீதி அநீதிகளைப் பட்சபாதமின்றி எடுத்துக்கூறும் நடுவு நிலைமை யுடையனவுமாகிய தின, வார, மாதாந்தரப் பத்திரிகைகளை நடத்துவதில் தலைமைவகித்தலும, ஜனங்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டு வழக்குத் தீர்ப்புக்கு வரும் நீதி ஸ்தலங்களில் தலைமை வகித்தலும், துஷ்டர்களை யடக்கும் நிமித்தம் ராஜாங்கத்தார் ஏற்படுத்தியுள்ள ராணுவத்திற் றலைமை வகித்தலும், ஜனங்களின் குறைவு நிறைவுகளை ராஜாங்கத்தார்க்கு எடுத்துரைத்துக் குறைகளை நிவர்த்திக்க முயலும் பொது ஜன சபைகளில் தலைமை வகித்தலும் முதலியவாகப் பலவகைப்படும்.

இங்ஙனம் பலவகைப்பட்ட பொது நன்மைகளின் க்ஷேமத்தைக்கருதித் தலைமை வகிக்கும் ஒவ்வொருவரும் அத்தலைமையை வகிக்கும்பொழுது, "உலகத்தில் நம்மை

ஒத்த பலரிருக்கவும், பொது நன்மைக் குழைக்கும் பெரும் பேறு நமக்குக் கிடைத்தது நாம் செய்த புண்ணியத்தின் பயனே, யெனக் கருதிப் பகைவர், அயலார், நட்பினர், ஆகிய மூவரையும் சமமாகப் பார்க்கும் நடுவு நிலைமையாயிருக்கக் கடவோம், நம்மாலியன்றவளவு பிற உயிர்க்கு நன்மை செய்வதையும், எவ்விதத்திலும் தீங்கு செய்யாமையும் மேற்கொள்ளக்கடவேம்; எனவும், அதன் பெருமையால் தெய்வத்தாற் கொடுக்கப்பட்ட தெனக்கருதிப், பாவபுண்ணியங்களுக்குப் பயந்து நடத்தலே தெய்வ சம்மதமாகும் எனவும், சங்கற்பித்துக் கொண்டவர்களாய், அத்தலைமைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆனால் தற்காலம் நம் இந்தியா தேசத்தில் இத்தகைய பொது ஸ்தலங்களில் தலைமை வகிப்போருட் பெரும்பாலர் மேற்கூறிய குணசம்பத்துக்க ளொன்றையும் கைக்கொள்ளாது, திரவிய லாபத்தைமட்டுமேனும், அதனோடு கௌரவத்தையேனும் கருதி, ஏற்றுக்கொள்வது வழக்கமாகக் காணப்படுகிறது.

இவ்வாறு பொது ஜன நன்மையை விருத்திபண்ணுவதாக ஒப்புக்கொண்டு, அங்ஙனம் செய்யாது, தன்னலமொன்றையே கருதிக் காலங்கழிக்கும் ஒருவன், அப்பொது நன்மையாகிய தன் கடமையைச் செய்யாமையேயன்றிப் பொது ஜனங்களுக்கு மிக்க தீமையைச் செய்தவனாகவும் ஆகிறான். ஆற்றல் இல்லாவிட்டால், தானே விலகிக் கொள்ளுதல் உத்தமமாகும். இவ்வாறின்றி முடியாத காரியத்தை மேற் கொண்டு நடத்த விரும்புதல் கொலை செய்தலையொக்கும் என்பதற்குப் பின் வரும்செய்யுள் சாக்ஷி கூறுகின்றது.

"செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோன்
றெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று." (நீதிநெறிவிளக்கம்.)

இதன் பொருள்:—செய்யமுடியாத காரியங்களையும், பிறர் தாக்ஷிண்ணியத்திற்காக நன்கு செய்து முடிப்பேன் என்று மேற் கொள்பவர்களுடைய கண்ணோட்டமானது ஒருவனைக் கோபித்துரைத்தால் மனவருத்த மடைவான் என்று, அவன் தலையை வெட்டிவிடுகின்ற ஜீவகாருண்ய த்தை ஒக்கும் என்பதாம்.

அன்றியும், பொதுக் காரியங்களிற்றலைமை வகிக்கும் ஆற்றலில்லாத ஒருவன் தனக்கொரு கௌரவம் சம்பாதிக்கக்கருதி அதன் பொருட்டுத்தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளை வீணாகச் செலவழிப்பதோடு, மேற்கொண்ட காரியங்களை ஊழலாக்கியும் வருவது மிகவும் விசனமடையத்தக்கதன்றோ! ஐயோ! அவர் அறியாமை யிருந்தவாறென்னே!

ஆதலால், தலைமை வகிக்கும் ஒவ்வொருவரும், எடுத்துக் கொண்ட காரியத்திற்கு மாறுபட நடந்தால், இப்பிறப்பிலே பலராலும் இகழப்படுவதோடு, மறுமையிலும் நரகம் முதலிய துன்பங்களுக்கு ஆளாவதும் நிச்சயம் என்று தெரிந்து கொண்டு, தன்னுடைய ஆற்றலையறிந்து, அதற்குத்தக்க தலைமை வகித்து, மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடத்தலே அவர்களின் கடமையாகும்.

மேலும், இவ்வகைத் தலைமைகளில் தாங்கள் ஒழுங்காக நடந்து கொள்வதோடு, தாம் கொண்ட காரியத்தைச் செய்வதற்கு உதவியாகத் தம்மால் நியமிக்கப்படும் அதிகாரிகளையும், கேவலம் உறவு, நட்பு, தாக்ஷிண்யம், பொருட்பயன் முதலியன காரணமாக நியமித்து விடாது, மேற்கூறப்பட்ட நற்குணங்களும், கொண்டகாரியத்தைச் செவ்வனே நடத்தவல்ல நிர்வாக சக்தியும் உள்ளவர்களாகத் தெரிந்து நியமித்தலும், இவர்களுடைய கடமையாகும்.

தற்காலத்தில் சிலர் இக்கடமைகளை மறந்தவர்களாய் எவ்விதத்திலும் தலைமை வகித்தற்கு உரியரல்லாதாரை

உறவு, நட்பு, சிபார்சு பொருட் பேறு, முதலிய வற்றுள் ஒன்றேனும் பலவேனும் காரணமாகக் கல்விப் பிரிவினை, தொழிற் பிரிவினை, முதலியவற்றிற்குத் தலைவர்களாக நியமித்து விடுகிறார்கள். இங்ஙனம் நியமித்து விடுவதால் அவ்வப் பிரிவினைகளில், நடை பெற வேண்டிய காரியம் ஒன்றும் நடை பெறாது, செலவிடும் பணமும், காலமும் பயனற்றனவாகவே கழிகின்றன.

இப்பயனில் செய்கையால் வரும் தீமைகளுக்கெல்லாம், தகுதி யறியாது நியமனஞ் செய்த தலைவர்களே காரணரா கின்றார்கள். ஆகவே பொது நன்மைகளில் ஊக்கமுடைய வராய்ப் புகழெய்த முன் வந்த பெரியோர்கள் 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற் போலத்' தீமை செய்து பழி யெய்துவது அவர் பெருமைக்குச் சிறிதும் பொருந்தாத காரியமாதலால் அதனை விட்டொழித்தலும் வேண்டும்.

இவ்வாறு தகுதி யறியாது தலைவரை நியமித்தால் தீமையெல்லாம் நியந்தாவையே சேரும் என்பதைத் தெய் வப்புலமைத் திருவள்ளுவர், எம்மதத்தார்க்கும் சம்மதமாக விளங்கும் தமது திருக்குறளில்,

"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமையெல்லாந் தரும்" (507)

இதன் பொருள்:— அன்புடைமை காரணமாக, அறிய வேண்டுவன வற்றை யறியாதாரைத் தலைவராகத் தெரிந்தெடுத்தலானது, தனக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும் என்பதாம்.

எனக்கூறிய பொது மொழியும், புராதன அரசர்களை யும், வள்ளல்களையும் பற்றிக் கூறும் "புறநானூறு" என் னுஞ்சங்கமருவிய நூலில், பாண்டிய நாட்டை அரசாண்ட 'ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்' என்னும் அரசர் பெரு

மான் தன் பகைவர்களை எதிர்த்துப் போர் செய்ய நேர்ந்த தருணத்தில், யான் இப்பகைவர்களைப் புறங்காட்டி ஓடும் படி செய்யாது விட்டால், இன்ன இன்ன பாவங்களைச் செய் தவனாவேன், என்று அநேக சபத வார்த்தைகள் சொல்லி வந்த முறையில், 'தர்மங்களைப் பாது காத்தற்குரிய பொதுச்சபைகளில், தர்மங்களின் பாகுபாடறியாத ஒரு வனைத் தலைவனாக நியமித்துக் கொடுங்கோல் செலுத்திய வன் அடையும் கதியை நான் அடையக் கடவேன்' என்ற கருத்தமைய, "அறனிலை திரியா அன்பின் வையத்துத் திற னிலொருவனை நாட்டி முறை திரிந்து மெலிகோல் செய் தேனாகுக"
(புறநானூறு-71)

எனக் கூறிய கூற்றும் வற்புறுத்துமாதலால் அந்நீதி மொழிகள், தலைமை வகிப்போர் ஒவ்வொருவரும் மறவாது கைக்கொண்டொழுகுதலும் முறைமையன்றோ?

ஆகையால், இதுகாறுங் கூறிப்போந்ததின் பயனாகப் பொதுஸ்தலங்களிலும், மற்ற இடங்களிலும், தலைமை வகி ப்பவர்கள் கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, பொறுமை, சத்தியம், நடுவு நிலைமை, ஊக்கம், நிர்வாக சக்தி, தன்னல மறுப்பு, முதலிய நற்குணங்களைச் சாதனமாகக் கொண்டு தான் ஏற்றுக் கொண்ட தலைமையை ஒழுங்காக நடத்த வேண்டுமென்பதும், அங்ஙனமே, தனக்கு உதவியாக நிய மித்துக் கொள்ளும் தலைவர்களையும், மேற்கூறிய நற்குணங் கள் உள்ளவர்களாகத் தெரிந்தெடுக்க வேண்டு மென்பதும், அங்ஙனம் செய்தவர்களே, தங்களுக்கும், உலகத்திற்கும் க்ஷேமத்தை விளைத்த உத்தம புருஷர்களாய், இம்மையில் உண்மையான புகழையும் பெருமையையும் பெற்று விளங்கு கிறார்கள் என்பதும், அவர்களே மறுமையில் நற்கதியடை யும் உரிமையுடையர் என்பதும் அறிந்துக் கொள்ளத் தக்கனவாம் மேற் கூறிய நற்குணங்களமைந்த பொது ஜனத் தலைவர்கள் நம் நாட்டில் மென் மேலும் பெருகுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

[ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பெயரைத் தெரிவிப் பாராயின் அதை வந்தனத்துடன் வரும் சஞ்சிகையில் வெளியிடு வோம். ப-ர்.]

சுகம்.

சுகமென்பதியாது? உருசிகரமான பதார்த்தங்களோடு பசிக்குஞ் சமயங்களில் திருப்தியாகப் போஜனம்செய்வதே சுகமெனக் கருதுவாரொரு சார்பார். அதி ரமணீயமான சப்ரமஞ்சத்தில் சூரிய வட மெத்தைகளென்ன, தலையணைகளென்ன, இவைகளிட்டு நித்திரை செய்வதே சுகமெனக் கருதுவார் மற்றோர் சார்பார். நாரி யின்பம் அனுபவிப்பதே சுகமெனக் கருதுவார் வேறோர் சார்பார். சீட்டுக்களி, கஞ்சாக்குடி, சாராயக்குடி இவைகளை அனுபவிப்பதே சுகமென யெண்ணுவனியொரு சார்பார். இவ்விதம் ஒவ்வொரு சார்பாரும் அவரவர் மனோ நிலைமைகளுக்குத் தக்கதாக ஒவ்வொன்றைச் சுகமென எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் எவர்கள் எவ்விதமான சுகங்களை அனுபவித்த போதிலும் இவற்றிற்கெல்லாம் அஸ்திவாரமாக ஒரு சுகமுண்டு. அது இருந்தால் மட்டிலும் மற்ற சுகங்கள் சுகங்களாகத் தோன்றும். அது என்ன வென்று பார்க்குமிடத்து, மனதின் சுகமாகக் காணுகின்றது. ஒருவனுக்கு மனதின் சுகமில்லாவிடின் அவன் தெய்வ இந்திராதி போகங்களை அனுபவித்த போதிலும் அவைகளெல்லாம் அசுகமாகவே தோன்றும்.

உதாரணமாக, ஒருவன் நாளையதினம் தன்னைத் தண்டிக்கப்போவதாக அறிகிறானென்று வைத்துக் கொள்வோம். இவனுக்கு சுகமுண்டா? இல்லை. இவனை மஹாராஜாக்கள் நித்திரை செய்யும்படியான அதி மனோகரப்பள்ளியறைகளில் படுக்கும்படி செய்தாலும் நித்திரை வராது. ஏன்? இவனுடைய மனதிற்குச் சுகமில்லை. பனிநீரைக் கொண்டு கொட்டினாலும் சந்தநாதி முதலிய பரிமள வர்க்கங்களை வாரிப்பூசினாலும் சுகம் வராது. மனச் சுகமிருக்கிற வொருவன் புல் தரையில் கிடந்தாலும் சுகமாக நித்திரை செய்கிறானல்லவா? ஒருவன் தனக்கு நியாய மல்லாத ஒரு ஸ்திரீயை இச்சி

க்கிறானென வைத்துக் கொள்வோம். இச்சிக்கும் நிமிஷந் தொடங்கி இவனுக்குச் சுகமென்பதே யில்லை. எதுவும் கசப்பாகவே தோன்றும். ஏனென்றால் மனச் சுகமில்லை. விசாரமற்ற நிலைமைக்கு மனச் சுகமென்று பெயர். ஆதலால் மனதிற்குச சுகக கேட்டை நாம் வருத்திக கொள்ளக் கூடாது. நமக்குரியவைக ளல்லாத வற்றை நாம் ஆசைப் படுவதினால் மனச் சுகத்திற்குக் கேடு வருகின்றது. ஒருவன் கடவுளால் தனக்குக் கிட்டி யிருக்கிற கிரமமான வரும்படியையும் அனுபவங்களையும் கொண்டு திருப்திப் படாமல் அதிக அசை வைததவனா யிருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இவன் கதி யென்ன? இவனுக்கு விசாரமென்பது ஒருக்காலும் ஓய்வில்லை. துக்கமே இவன் மனதில் குடி கொள்ளுகின்றது. தன் குற்றத்தை அறியாமல் தெய்வததையும் பிறரையும் நொந்து கொள்கிறான். தான் மிதமற்ற ஆசையும் அபிமானமும் வைத்ததினாலல்லவோ இவ்வித மனோ துக்கம் நேரிட்டதென்று அறிகிறானில்லை. இஜ்ஜென்மானுபவங்கள், தான் முன் ஜென்பங்களிற்செய்த நன்மை தின்மைகளுக்குத் தக்கதாக ஏற்பட்டிருக்கின்றனவென்றும், முயற்சி வேண்டுவதே யொழிய அதிக ஆசை கூடாதென்றும், உணர்கிறானில்லை. ஒருவன் பிறரிடததுள்ள குற்றங்களை திரிந்து எடுதது தூஷிக்கப் பட்டவனென்று வைததுக் கொள்வோம், இவனுககும மனச் சுகமெனபது கிடையாது. சகல ஜனஙகளுடைய அதிருப்திக்கும் தான பாததிரனாகிறான. அதனால ஜனங்களின சகாயமிலலாமலும் தனக்கு துனபம் ஒழியாமலும் நற்பழக்கததை பழகுவதைத தவிரதது, கெட்ட வழிகளில் பிரவேசிதது நாசமடைய தானே காரணமாய்த் தீருகிறான. இதற்கு மாறாக, சகல ஜனங்களையும் சகோதர பாவததோடு நேசித்துக கொணடு அவரிடததுள்ள நற்குணங்களைக் கற்று, தனக்கு கிடைத்திருக்கிறதைக் கொண்டு சந்தோஷப்படுவானானால் எவ்வளவு மேலான மனச் சுகத்தையடைகிறான்! அந்தோ பரிதாபம்!

"எவனொருவன் சகல வுயிர்களையும் கருணையோடு நடத்துகிறானோ அவனே நமது பக்தன்" என்று சர்க்ஷாத் பகவான் கீதையில் கூறுகிறார்.

நாம் அந்நியரை அன்பு பாராட்டினால் மட்டிலுமே அவர்களும் நம் பேரில் அன்பு பாராட்டுவார்கள். இதில் அவர்கள முன் அன்பு பாராட்டட்டும், அப்பால் நாமும் அன்பு பாராட்டலாமென்றிருத்தல் கூடாது. மனச் சுகத்தைத் தேடினால்மட்டிலுமே நமக்குச் சுகம் கிடைக்கும்.

அதனால்தான் ஒரு பெரியவர் கூறுகிறார்,

தன் சுகம் பாராது செய்கடன் செய்கவே
தானே சுகம் வரும செய்கடன் செய்கவே.

உன்னுடைய சுகத்தை மாத்திரம் கருதாது அந்நியருக்கு நீ சுகததை உண்டு பண்ணும் கடனைச் செய்வாயானால சுகமானது தானே வருமென்றார். ஆதலால நமக்கு மனச் சுகம் உண்டாக வேண்டுமானால் நாம செய்ய வேண்டுவதென்ன வென்று பார்பபோம.

(1) நமக்குத் தகாதவைகளை அடையநாம் ஆசைப்படாமலிருத்தல்.

(2) உளளதைக் கொணடு திருப்திப் படுதல்.

(3) யாவரையும் சகோதர பாவததோடு நடத்தல்.

(4) நம்மாலியன்ற வரையும் ஒவ்வொன்றையும் சகித்து நடததல்.

(5) தன் காரிய நிரதனுப் மட்டிலு மிராமல் பிறருக்கு நன்மையை நாடல்.

இவ்வைந்தையும் கடைப்பிடித்து ஒழுகுவோமானால் நமக்கு நிச்சயமாக சுகம் சித்திக்கும்.

டி. அகவ்ஸ்தியலிங்கம் பிள்ளை.

தறகால நிலைமை.

(192-ம்.பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அங்ஙனம் சிந்திப்பவர் மிகச்சிலரே...
முடைய பகுவம் இன்னும் குறை...

யாகும். நம்முடைய நாட்டில் பொதுக்காரியங்கள் சரிவர நடக்காததற்குக் காரணம் இதுவே. சுபலாபத்தைக் கருதாமல் நமது கடமையென்று நமது கருமத்தைச் செய்ய முயலுவோமானால், நாமும் பயனடைவோம், காரியமும் நன்கு நிறைவேறும். நமது தாய் நாடும் மேம்பாடுறும். ஆனால் நாம் போய்த்தான் அக்காயரிம் நடக்கும்என்ற அகங்காரம் கொண்டு போகவேண்டுமென்றல்ல. நாம் உபகாரம் செய்யும் பாக்கியத்தைப் பெறுவோமாக என்ற அவா மிகுந்திருக்கவேண்டும். இவ்விதமான சத் அபிப்பிராயத்துடன் ஜனங்கள் எங்கு அதிகமாகக் கூடுகிறார்களோ, அங்கே காரியங்கள் சுலபமாயும் ஒழுங்காயும், ஒற்றுமையாயும் நடக்கும். அனேகமாய் பிரஹ்மஞான சபைக் கன்வென்ஷன்களில் கூடும் அங்கத்தினர் இவ்விதமான எண்ணங்களுடன் வருவதனால் தான் அவ்வமயங்களில் அரிய பெரிய காரியங்கள் நடைபெறுகின்றன.

***

நவம்பர் மாதத்து தியாஸபிஸ்டுப் பத்திரிகையில் மிகவும் உபயோகமுள்ளதும் ஆச்சாரியகரமானதுமான ஒரு வியாசம் வெளிவந்துள்ளது. செடிகள், கொடிகள், விருக்ஷங்கள இவைகளுக்கு உயிர் உண்டு எனபது தற்கால ஜீவ சாஸ்திரம வாசித்த நவீனர்களுக்கும், பண்டைக்கால சாஸ்திரஞர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆனால் இவ்வியாஸ காததா கூறுவது என்னவெனில் ஒவ்வொரு புஷ்பத்தையும் இலையையும் சூக்ஷ்மதிருஷ்டியால் பார்க்கும்போது அவைகளுக்கு ஒரு குணம் இருப்பதாகத் தென்படுகின்றதாம். ஒரு புஷ்பம் கர்வத்தோடு கூடியதென்றும், மற்றொன்று அன்புடன் கூடியதென்றும், ஒன்று இரக்கமுள்ளது
ன்றும், மற்றொன்று ஆனந்தமுள்ளது என்றும், பற்பல
யுடையன வென்று எழுதியிருக்கிறார். மேலும்
விதமான உணர்ச்சியை கிட்ட வருப
வை என்றும் கூறுகிறார். உதா

ரணமாக கன்னடா தேசத்தில் ஒரு விதமான மரமா னது விசேஷமாக வளர்ந்திருக்கின்றது. ஆகையால் அம் மரத்தின் குணமாகிய சுறுசுறுப்பானது அவ்வூர் ஜனங் களுக்கே யுண்டாகியிருக்கிறது. ஒரு நிமிஷமும் சும்மா விருக்கமுடியாதபடி அத்தியந்த ராஜஸ சுபாவ முடையவ ராய் அந்நாட்டார் இருப்பது அம்மரத்தால் தான் என் றும், அம்மரத்தையே அத்தேசத்தார் கொடியில் சின்னமா கக் கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்க விஷயமென்றும் கூறுகிறார். இது சம்பாவிதம் எனினும், இத்தகைய உணர் ச்சியுள்ளவர் இந்தியாவில் உளரா என்றும் அல்லது நம் நாட்டில் தமிழிலாவது ஸம்ஸ்கிருதத்திலாவது, இங்ஙனம் ஸ்தாவரங்களின் குணங்களைப் பற்றியும் அவைகளின் ஸூக்ஷ்ம வர்ணங்களையும், அமைப்பையும் பற்றிக் கூறி யுள்ள புஸ்தகங்கள் உளவா என்பதையும் அறிய மிக்க அவல் கொண்டுள்ளோம். நேயர்கள் அறிவிப்பார்களாயின் அவர்கட்கு நாம் மிகுந்த வந்தனமளித்து ஏற்றுக்கொள் வோம்.

ஆர். அரங்கசாமி ஐயர்.

பர லட்சணம்.

அதீதத்து ளாகி யகன்றவ னந்தி
யதீதத்து ளாகி யறிவிலோ னன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயி ரொன்றும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே.

ஆதியு மந்தமு மில்லா வரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத் தோன்றாமையி
னீதிய தாய்நிற்கு நீடிய வப்பர
போத முணர்ந்தவர் புண்ணியத் தோ–

நடராஜர்.

இந்துக்களுடைய தேவாலயங்களில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு விக்கிரகமும் அதிகுப்தமான அர்த்தங்களை அடக்கிக் கொண்டு நிற்கின்றது. உதாரணமாக நடராஜர் விக்கிரகத்தை எடுத்துக் கொள்வோம். நடராஜர் என்றால் நடன மாடத்தில் வெற்றி பெற்றவரென்றர்த்தம். உலகமாகிற அரங்கத்தில் நம்முடைய யதார்த்த நிலையில் நிற்கவேண்டுமென்றும், நம்மை ஆட்டுவிக்கும்படியான அனந்தம் சக்திகள் நிறைந்திருப்பினும் அவைகளுக்கிடங் கொடாமல் அவைகளை அடக்கி நம்மை மேற்படி சக்திகள் ஆட்டுவிக்காமல் நாம் அவைகள் ஒவ்வொன்றையும் ஆட்ட வேண்டுமென்றும் கருத்தைக் குறிப்பிக்குமாறு நடராஜர் விம்பம் சில பிரத்தியேக சின்னங்களோடு அமைக்கப் பெற்றிருக்கின்றது.

முதலில், ஒரு பாதம் முயலகனை மிதித்துக் கொண்டு நிற்கின்றது. இது நம்முடைய ஜனன மரணங்களுக்குக் காரணமா யிருக்கும் மஹா மாயையை அடிமையாக்க வேண்டுமென்னுங் கருத்தை உணர்த்துகின்றது.

இரண்டாவது, ஒரு கால் உயர்த்தி யிருக்கிறது. இது உலகம், மாயை மனது என்ற மூன்றையுங் கடந்த துரிய நிலைமையை யுணர்த்தா நின்றது.

மூன்றாவது, தேகத்தில் புலித்தோல் அணிந்திருக்கின்றது. இது அவரால் கொல்லப் பட்ட புலி. அது போல நம்முடைய அகங்கார மாகிற புலியை நாம் எதிர்த்துக் கொல்ல வேண்டுமென்னுங் கருத்தை உணர்த்தா நின்றது.

...வது, ஒருகை உடுக்கை ஏந்திக் கொண்டிருக் ... ஒவ்வொருவரும் மயக்கத்தை அடை ... ” “மரணம் நிச்சயம்” “மாயா

பிசாசு சூழ்ந்திருக்கின்றது,” என்றறிந்து எச்சரிக்கை யோடிருக்கும்படி கவனத்தைத் தூண்டுகின்றது.

ஐந்தாவது, ஒரு கை மானைப் பிடித்திருக்கின்றது. நம்முடைய மனதானது ஓரிடத்தில் நில்லாமல் மானைப் போல் ஓடிக் கொண்டிருக்கு மென்றும் அதைப் பிடித்து அடக்க வேண்டு மென்னுங் கருத்தை குறிப்பிக்கின்றது.

ஆறுவது, ஒரு கை ஞானத்தின் அடையாளமாகிற சமாதானத்தையும், சாந்தத்தையும் நாம் அடையும்படி குறிப்புணர்த்துகின்றது.

ஏழாவது, ஒரு கையில் அக்கினி யிருக்கின்றது இது ஒவ்வொரு ஆத்மாவும் மஹா மஹா ஜோதியின் அம்ச மென்றும், அந்த மஹா ஜோதியாய் ஒவ்வொரு ஆத்மாவும் ஆகும்படி முயல வேண்டு மென்னும் குறிப்பை உணர்த்தா நின்றது.

எட்டாவதாக, புன் சிரிப்பு நிறைந்த வாயும் சாய்ந்த கண்ணோட்டமும் மற்ற அலங்காரங்களும் உலகத்திற்கு அன்பையும், சந்தோஷத்தையுங் காண்பிக்கின்றது.

ஆகவே நடராஜர் விம்பம் என்ற குருவானவர் நம்மை குறிப்புணர்த்துகிறது என்னவென்றால், நாம் மாயையைக் கடக்க வேண்டு மென்றும், உலகத்திற் குள்ளாகாமல் அதை வெற்றிகொள்ளவேண்டு மென்றும், மானைப் போல் ஓடிக் கொண்டிருக்கும் மனதை அடக்கவேண்டுமென்று அகங்காரத்தை நீக்கவேண்டுமென்றும், நம்மைச் சூழ்ந்திருக்கும் மாயாப் பிசாசுகளைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றும். உபசாந்தம், சமாதானம், அன்பு இவைகளைப்பெற்று துரிய பதத்தை அடைய வேண்டுமென்றும் அறிவைக் கொடுக்கின்றதே தவிர வெறும் விச்[illegible] நிற்கவில்லை.

ஓம் தத் ச[illegible]

ஸமரஸ ஸ்தோத்திரம்: **

எந்தக் காலமு மேதுள தேயமும்
சந்த மாதவர் ஞானவர் சான்றவர்
எந்தம் நாயக! ஈச! தேவே! யெனச்
சிந்தை யேத்துபல் ஜீவரின் தந்தையே!

ஆதி காரண! ஆய்த லரியவ!
ஓதென் னூகமெல் லாமுற ஓர்வனேல்
கோதில் நல்லனீ கூறுநா னந்தகன்
ஏதி யானறி யீதல தில்லையே,

சாட்சி பூதமே சால விதிப்பன
மோட்ச நல்வழி யிற்செல முந்தவும்
ஆட்சி செய்யலா காதென நீக்கிய
*காட்சி கொண்டியான் ||கும்பியிற் காப்பனே.

மூட்டில் சீர்குண மூதறி வாசிகள்
தட்டி டாமலே தாங்கியான் போற்றுக
இட்ட நீயருள் இன்பத்தைத் §துய்ப்பனே
சிட்ட னன்றியைச் செய்தவ னுவனே.

நல்லொ ழுக்கினின் நல்வழி யீந்தியான்
†ஒல்கா வண்ணமே ஓம்பிநீ காத்தருள்
பொல்லாச் செய்கையைப் போற்றிடின் என்மனம்
நல்ல தோர்நெறி நாட நவில்வையே.

நற்கு ணத்தினி நல்கி யருள்வன
¶ஒற்க மில்லறி வூனச்செ ருக்கொடு
நற்போ தத்தினீ நல்கவொ ழித்தவை
அற்ப மாய்க்குறை கூறியு மாள்வனே.

** "Father of Ace" என்ற "Universal Prayer" மொழி பெயர்ப்பு.

*காட்சி—அறிவு.

||கும்பி—நரகம்.

§துய்த்தல்—அநுபவித்தல்.

†ஒல்கா—நீங்குதல்.

மற்ற வர்துயர் ‡ஓரவும் மன்னுயிர்
குற்ற மேபுறங் காக்கவும் கூறுவாய்
பற்றி னால்பிறர் பாலருள் காட்டுவன்
*அற்ற ஆருள் காட்டிநீ யாள்வையே.

உன்னி உன்னுயிர் தந்தெனை ஊக்கினாய்
என்னி லெத்தனை ஈனமி ருப்பினும்
||துன்னிச் சாரிடங் தோறுமே தூநெறி
என்னை §யின்றிருப் பின்னிற பின்னருள்.

இன்றெ னக்குண வே†யொழி வேயளி
¶என்றின் கீழுறும் எப்பொரு ளாயினும்
நன்று நல்கினை யோவிலை யோவறி
உன்றன் நன்பனக் கட்டளை உய்கவே.

[காலம்சென்ற] எஸ். சாமிநாதையர்.

சமாசாரம்;

நன்னிலம்தாலூகா முதலாவது பிரஹ்ம ஞான கான்பரன்ஸ்.

திருமீயச்சூர் சாந்தி ஆசிரமம் என்ற பிரஹ்ம ஞானக் கிளைச் சபையாரால் அழைக்கப்பட்டு, திருமீயாச்சூரில் இக்கான்பரன்ஸ் சென்ற ஆகஸ்டு மீ 31வ கூடிற்று. தஞ்சை ஜில்லாவின் பற்பல பாகங்களினின்றும் அடையாற்றினின்றும், 13 ஸ்திரீகள் உள்பட 51 அங்கத்தினர் வந்து கூடினார்கள். பிரஹ்மஸ்ரீ எஸ். இராஜாராமையர் அவர்கள் அக்கிராசனராய் அமர்ந்தார். அவர்களை உபந்நியாச மண்டபத்திற்குப் பவனியாய் அழைத்துச் சென்று அங்கு அவர்களை உபசாரப் பத்திரிகை மூலம் வரவேற்றார்கள். "இவர்களது அகன்ற ஞானமும், ஆழ்ந்த அறிவும், தாம் செய்யும் எக்கருமமும் பரமனது திருத்தொண்டெனக் கொண்டொழுகும் தூய்மையான

---

‡ஓர்தல்—உணர்தல்

*அற்ற—அத்தன்மையான

||துன்னி—நெருங்கி.

§இன்று இருப்பின் இறப்பின் அருள் எனப்பி…

†ஒழிவு—மன அமைதி.

¶என்று—சூரி…

சித்தத்தின் தெளிவும், சிற்சில சங்கடமான சந்தர்ப்பங்களில் நம்மை மயங்கச் செய்யும் அறிவைப் பழித்து அதனை மேற்கொள்ளும் பக்தி யென்னும் இவரது பொக்கிஷமும் நம்மி லனேகருக்கு பின்பற்றத் தகுந்த மாதிரிகளாயுபயோகிக்கப்படுகின்றன வெனக்கூறல் மிகையாகாது, என்று அப்பத்திரிகையில் கூறியிருப்பது உண்மையே. அவர்கள் கூறிய மறுமொழியில் பிரஹ்மஞானத்தைப் பரவச்செய்வதில் நாமி யாவரும் விடா முயற்சியுடன் இடைவிடாது உற்சாகசீலராயிருக்கவேண்டுமென்றும், கற்று அதற்கு தக நிற்கவேண்டுமென்றும் கூறினா. ஈ. எஸ். மீட்டிங்குகள் நடந்தன. ஸ்ரீமான் எம் என் ராமசாமி ஐயர் அவர்கள் பிரமன் வருவதற்கு நாம் செய்யவேண்டிய ஆயத்தங்கள் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசினர். பிற்பகலில் கார்யாதிச சந்திப்பு நடந்தது. அதில் எவ்விதம் தஞ்சை ஜில்லாவில் பிரஹ்ம ஞானத்தைப் பரப்புவது என்ற விஷயமானது பரியாலோசனை செய்யப்பட்டது. இந்தியஸ்திரீகளின் சங்கத்தின் சந்திப்பும் நடந்தது. அப்போது ஸ்ரீராஜாராமையர் மனைவியார் ஸ்ரீமதி தர்மாம்பாளை அக்கிராசனம் வகிக்கும்படி வேண்ட அவர்களும் இணங்கி, இனியதோர் பிரசங்கம் செய்தனர். அதன் விஷயம் பிரஹ்மஞானத்தால் ஸ்திரீகளுக்குண்டாகும் பிரயோஜனம். ஸ்ரீ ஸ்ரீனிவாசையர் மனைவியார் ஸ்ரீமதி ஸாவித்திரியம்மாள் "வீட்டில கவனிக்கவேண்டிய சுகாதார விதிகளை"ப்பற்றியும், ஸ்ரீ எம். என். ராமசுவாமி ஐயர் மனைவியார் ஸ்ரீமதி செல்லம்மாள் "குழந்தைகளை வளர்க்கும் முறை"யைப் பற்றியும் பேசினார்கள்.

மாலையில் ஏனங்குடி வி. ராமசந்திர நாயுடு அவர்கள் பிரஹ்மஞானம் என்றால் என்ன என்று விளக்கி யுபன்யஸித்தார்கள். பின்னர் ஸ்ரீ பாட்டமால் இ. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், மாயவரம் ஹைகோர்ட் வக்கீல, பிரஹ்ம ஞானத்தின் பெருமையைப்பற்றியும், ஸ்ரீமான் ஏனங்குடி எஸ். ஸ்ரீனிவாசையர் அவர்கள் பிரஹ்மஞான ஒழுக்கத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். அக்கிராசனர் அவர்களின் முடிவுரையுடன் கூட்டங்கலைந்தது. மாலையில் நடந்த கூட்டத்திற்குப்போது ஜனங்கள் அநேகர் வந்திருந்தனர். டாக்டர் ரவீந்திர நாத டாகூர் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள கபீர் தாஸ கவிகள் என்ற பாடல்களை ஆங்காங்கு கையாண்டு பிரஹ்மஞான ஒழுக்கம் என்றால் என்ன என்பதை அக்கிராஸனர் விளக்கிக்காட்டி முடிவுரை கூறியதை யாவரும் ஆனந்தத்துடன் கேட்டு மகிழ்ந்தார்கள்.

இரா 8-மணிக்கு உதய திசை நக்ஷத்திரச்சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது ஸ்திரீகள் பக்தி ரஸத்துடன் சில பாடல்கள் பாடினார்கள். அதன்பிறகு, ஸ்திரீகளுக்கென்று ஒரு பிரஹ்ம ஞானக் கிளைச் சபையானது ஏற்படுத்தப்பட்டது. அதற்கு அக்கிராசனா ரத்ன
...பதி முதலியார் மனைவியார் ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாள். ஸ்ரீ பி.
...சந்திர சாஸ்திரியார் மனைவியார் ஸ்ரீமதி பாலாம்பாள்

...லாம் நன்கு நிறைவேறினது.

படங்களுடன் கூ... கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது ஈ...யின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன்	ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள்	அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஹிந்து என்பவன் எவன்	ஷை செய்யுள்
காயத்திரி	எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.

லோககுருவாகிய பரமன் வருவானேல்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சர்மார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்.—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் தூரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம்	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது	0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0—12—0

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம்
மு...

ஜகப் பிரசித்திபெற்ற
ஜின்டான் மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளூயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாபிலட்கள், பாலாமிருதம், மேலான டன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

...ங்கள் மதுரை ஏஜண்டு:—

...கிருஷ்ண நாயுடு,
...ண்டு கோ, மேலக்கோபுர வீதி, மதுரை